269

உ

தாய்மொழி தழைக! தாயகம் வாழ்க!!

தமிழணங்கு.

ஒரு மதிமுகத் தாள்.

"அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே."

மலர் க. | விக்ரம - பங்குனி. | இதழ் ௰௨.

வாழ்த்து.

கமழ்மணங் கிளரும்வாகைக் காவலன் செங்கோல் வெல்க!
இமிழ்முர செழிலி பெய்க! யாவரும் யாவும் உய்க!
அமிழ்துறழ் மகளிர் கற்பா ரணிதமி ழணங்கு வாழ்க!
தமிழ்வலந் திகழ்ந்தூ ழூழி தமிழரண் தழைக! நன்றே!

தமிழணங்கு வணக்கம்.

அதிருஞ் சுருதிச் சதுரங்கத்
தணிகொள் நாப்பண் முரசார்ப்ப
அலருங் கமலத் தலமருவி
அழகார் தருமின் னருளாழி
கதிரும் பதியிற் சாரதியர்
கடவுஞ் சகடத் தேர்நடவிக்
கடையேற் கிடர்செய் யறுபகையைக்
கடக்க வடிவாள் விழிக்கணை தேர்ந்
தெதிரும் படலப் பவப்படைகள்
இரியப் புரியுந் திருவருளாய்!
இருமைக்குரிய வெவவையு மெனக்
கினிதிங் கருள்நின் தாள்மலரின்
மதுரங் கொழிக்குந் தமிழ்நறவம்
மடுக்கும் வாழ்வே கொடுக்குகவே!
வணங்கார் வணங்குந் தமிழரணம்
மணங்கண் டிணங்குந் தமிழணங்கே!

ஆ. மா. சிவஞானம்.

தமிழணங்கு வணக்க அருஞ்சொல் விளக்கம்.

போழிப்புரை:—சதுரங்க சேனையின் பல்வகை அணிவகுப் புக்களிடையே முரசம் முழங்க, தேர்த்தட்டின் கமலவிதழ்போ லமைந்த நடுவிடத் தமர்ந்து, வாள்விழிக் கணையால் கடையேற் கிடர்செய்யும் அறுபகைகளையும், பவப்படைகளையும் இரியப் புரி யுந் திருவருளாய்! தமிழணங்கே! நின் தாள் மலரின் தமிழ்த் தேனை அருந்தும் வாழ்வினையே எனக் கருள்க! என்பதாம்.

நூற்களத்திற்கும், போர்க்களத்திற்கும் ஒப்புமை.

சுருதி—ஒலி, வேதம்; சதுரங்கம்—நால்வகைப் படை, (தேர், யானை, குதிரை, காலாள்) சதுரங்கபந்தம் என்னும் சொல்லணி; அணி—ஒழுங்கு, அலங்காரம், படை வகுப்பு; நாப்பண்—நடு, தேர்த்தட்டு; முரசு ஆர்ப்ப—முரசம் முழங்க, முரசார்ப்பு—முரசபந்தம் என்னும் சொல்லணி; நா பண் முரசு ஆர்ப்ப—நாக்கினின் றெழும் இசையொலியே முரசொலியாக என்றுமாம்; கமலத் தலம்—தாமரை இதழ்போலமைந்த இடம், பத்ம வியூ கம்; அழகு ஆர் தரும்—அழகுபொருந்திய, அழகிய கூர்மை பொருந்திய; ஆர்—சக்கரத்தின் ஆர்க்கால், ஆரச்சக்ர பந்தம் என்னுஞ் சொல்லணி; மின்னருள்—மின்னொளியைத் தரும், இன் னருள்—இனிய அருள்; ஆழி—சக்ரம், வட்டம், ஆக்ஞா சக்ரம், ஆழிப்படை, சக்ரவியூகம், சக்ரபந்தம் என்னுஞ் சொல்லணி; ஆழி—கடல் எனக் கொள்ளின் இன்னருளாழி என்பது விளியு மாம்; கதிரும்—ஒளிவிடும்; மதியின்—அறிவினையுடைய; சாரதியர்—தேர்ப்பாகர், புலவர்; கடவும்—செலுத்தும்; சகடத் தேர்—சகடமாகிய தேர் (சகடம்—தேர், இருபெயரொட்டு) தேர்—ரதம், ரதபந்தமென்னுஞ் சொல்லணி; ஏர்—அழகு; சகடத்து ஏர்—சகட வியூகத்தின் அழகு; நடவி—நடத்தி; அறுபகை—காம, க்ரோத, லோப, மோக, மத, மாற்சர்யங்கள்; வடி—மாம்பிஞ்சி யினைப்போன்ற, வாள்—ஒளிபொருந்திய, விழிக்கணை—விழியாகிய கண்ணை, இருபெயரொட்டு; (கண்ணை, கணை இடைக்குறை); வடிவாள்—கூரிய வாள், விழிக்கணை—விழியாகிய அம்பு; கணை தேர்ந்து—அம்பெய்து; படலம்—கூட்டம்; பவம்—பாவம்; படை—சேனை; திருவருளாய்—திருவருளையுடையவளே; திரு—தெய்வத் தன்மையை; அருள்—கொடுத்தருள்கின்ற, ஆய்—தாயே; இருமை—இம்மை, மறுமை; தாள் மலர்—தாளாகிய மலர், இம் மதிமுகத்தாள்; தமிழ் நறவம்—தமிழ்த் தேன்.

உணர்வும் உழைப்பும்.

உயிரினம் உவகை ஒன்றனையே நாடும். அவ்வுவகைக்கு உழைப்பே இன்றியமையாதது. உழைப்பால் எய்தாத உவகை போலி உவகையாகும். போலி உவகை அவலமே தரும். பொருள்களின் நலமே உவகைக்குத் தோற்றுவாய். அந்நலன் துய்த்தற்கு உரிமை வேண்டும்.

நம் நாடு சிறந்த நலன்களையுடையது. தற்போது நம்மனோர் அந்நலன்களைத் துய்த்து உவக்கும் உரிமையை நாடுகின்றனர். உரிமை வாழ்வின் உழைப்பிற்கு உணர்ச்சியே அடிப்படை. உணர்ச்சியின்றி உழைக்கும் உழைப்பு, பிழைப்பிற் பெருந்துயர் தரும். மனம், மொழி, மெய்கள் மூன்றனுள், மொழி வளர்ச்சி ஒன்றே உணர்ச்சியூட்ட வல்லது. அவ்வவர் தாய்மொழி வளர்ச்சியால்தான் மக்களுணர்ச்சி மாண்புறும்.

நந்தம் செந்தமிழ்ச் சொற்கள் ஒவ்வொன்றும் சிறந்த உணர்ச்சியின்பாற்படும். அச்சொற்களைப் பொருளறிந்து வழங்குவோர் இவ்வுண்மையை உணர்வர். பொது மக்கள் தம் தாய்மொழியின் சொல்லாற்றல் இன்னதென் றுணராமையின் அன்றோ உணர்ச்சியில் தளர்ச்சியுற்று அடிமை வாழ்வில் அழுந்துகின்றனர்!

இதனை உய்த்துணர்வோர் ஒரு சிலரே. அவர்தாமும் காலநிலை நோக்கி இடம், பொருள், ஏவல்களுக்கேற்ப நடந்து உழைப்பின்றி வாணாளை வீணாக்குகின்றனர். ஓரோவழி உழைக்க முன்வருவோரும் பொதுமக்களின் உணர்ச்சிக் குறைவால் ஆதரவின்றி அல்லலுறுகின்றனர். உடைமையின் அருமை உடையார்க்கே விளங்கும். நம் தமிழருமை யாரறிவர்! தமிழறிவுடையார் அன்றோ! அன்னோர் தாமுணரும் உணர்ச்சியை ஏனையோரும் உணருமாறு உழைத்தல் நலம்.

உணர்வும் உழைப்பும் ஒன்றுறின்
உயர்வும் உவப்பும் ஒன்றுறும்.

ஆசிரியன்.

272

வாழிய செந்தமிழ்!

வட ஆர்க்காடு மாவட்டத்து
ஆம்பூர் கன்கார்டியா உயர்தரக் கலைக்கழப்
போதனுமுறைக் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியரும்
தமிழகம் போற்றும் நம் 'தமிழணங்கு' ஆசிரியரும் ஆகிய

உயர்திரு ஆரணி மா. சிவஞானம் அவர்கட்கும்
திருமதி ஆர். சரஸ்வதியம்மையார்க்கும்

இல்லற நெறியில் இனிதோர் ஆண்குழவி தோன்றிய தறிந்தஞான்று
ஆன்றமகிழ்வால் யாத்த

வாழ்த்துப்பா.

"ஆண்டவன் அருளிய அலகிலா உலகிற்
பூண்டநற் பகுத்தறி வுறுதமிழ்ப் புலவர்
வகுத்தநாற் பொருள் வளாறம் ஈட்டித்
தொகுத்தசீர்ப் பொருளால் துய்க்குமின் புவந்து
மங்கலம் விளக்கும் நன்கலம் பெற்றினி
தோம்புமில் லறத்தை யுயர்நிலை வீட்டினைத்
தாம்பெறல் மக்களின் தனிக்கடன்" என்றே
போற்றினர் எவர்க்கும் பொதுநெறி முறையே!
செம்மையம் முறையிற் றிறம்பெறப் பழுத்த
ஆ.மா. சிவஞானத் தேமாங் கனியே!
நின்னுயிர்த் துணையெனத் துன்னுகற் பரசியார்
சரஸ்வதி எனுந்தமிழ்த் தையலார் தமிழணங்
கின்னருள் பெற்றிவண் பன்னரும் பாலனைப்
பயந்தனர் தமிழகம் வியந்திட; நீவிர்
நீரின்றமையா நேமியில் மழை யெனப்
பொற்கோட் டிமயமாப் புவிப்பொறை பெற்றுளம்
மின்னியல் வானென மிளிர்ந்திறை யருளால்
அறிஞர்கள் போற்ற, அவனியில் நலமே
வாழி! வளமொடு வாழியர் நெடிதே!

இங்ஙன்,
தண்டமிழ்த் தொண்டன்
நும் அன்பன்,
M. A. தேவராஜன்.

திருவத்திபுரம்,
கிரிதரன்பேட்டை,
வைகல், 19—3—'41.

273

சித்தாந்தத் திருநெறியும் * *
* * வாழ்க்கையின் இலக்கும்

உயர்திரு த. ம. மு. பெருவேந்தூர்கிழார் அவர்கள்,
தமிழ் விரிவுரையாளர்,
யுனைட்டெட் தியலாஜிகல் காலேஜ், பெங்களூர்.

228-ம் பக்கத் தொடர்ச்சி.

கடவுளுக்குப் பாதம், கண், வாய் முதலியவை இலவெனினும் மனித உவமைபற்றி இங்ஙனம் பேசப்படுதல் வழக்காம். அங்ஙனமே கடவுளுக்கு ஆண், பெண் தன்மைகள் கற்பித்துப் பேசுதலுமா மென்க.

மேற்கூறிய இப்பெண்ணுருவாகிய சக்தி உலகத்திற்குத் தாய் எனப்படும். ஆணுருவாகிய சிவன் உலகத்திற்குத் தந்தையெனப் படுவர். இத் தாய்க் கடவுளும் தந்தைக் கடவுளும் மலரும் மணமும், மணியும் ஒளியும், பழமும் சுவையும், தீயும் வெம்மையும், நீரும் தண்மையும் போன்று இரண்டறக் கலந்தவர்களாவர். ஆதலினாலேயே கடவுள் அர்த்தநாரீஸ்வரர் எனப்படுகிறார். அதாவது பாதியுடல் பெண்ணாகக்கொண்ட ஈஸ்வரர் என்பது. இங்குக் கூறப்பட்ட சிவனுடைய அஷ்ட மூர்த்தங்களையும், ஆண் பெண் தன்மைகளையும் பற்றிக் குமாரகுருபர சுவாமிகள் கூறும்

“ அருவருக்கு முலகவாழ் வடங்க நீத்தோர்க்
கானந்தப் பெருவாழ்வா மாடல் காட்ட
மருவருக்கன் மதிவளிவான் யமானன் தீ நீர்
மண்ணெனுமென் வகையுருப்பின் வடிவு கொண்ட
ஒருவனுக்கு மொருத்திக்கு முருவொன் றாலவ்
வுருவையிஃ தொருவனென்கோ ஒருத்தி யென்கோ
இருவருக்கு முரித்தாக வொருவ ரென்றோர்
இயற்சொலில தெனின்யான்மற் றென்சொல் கேனே.”

(சிதம்பரச் செய்யுட் கோவை 54).

என்னும் அருமை வாக்கு உற்றுநோக்கத் தக்கது.

சிவபிரானோடு இரண்டறக் கலந்த இச்சக்தி தனது தன்மை அல்லது தொழில் வேறுபாட்டால் பராசக்தி, ஆதிசக்தி(—திரோதான சக்தி), இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி, என ஐவேறு வகைப் பெயர்களைப் பெறும்.

பரா சக்தியாவது ஞான மயமான சிவசக்தி (**The supreme Energy of all Intelligence**).

ஆதி சக்தியாவது ஆன்மாக்களின் ஆணவமலம் நீங்கும்படி அவற்றிற்கு உலக அனுபவங்களைக் கொடுத்து அவற்றைத் தோன்றாத் துணையாய் நின்று பக்குவப்படுத்திவரும் சக்தி (இது திரோதான சக்தி எனவும் படும்.

இச்சா சக்தி—சித்தம் என்னும் சக்தி (**Siva's Energy of will**).

ஞானசக்தி—ஆன்மாக்கள் இருவினைப் பயன்களை நுகர்ந்து தொலைக்குமாறும் அங்ஙனம் தொலைத்த பின்னர் அவைகளைச் சிவஞானத்தால் முக்தியெய்துமாறும் செய்யும் சக்தி.

கிரியா சக்தி—உலக சிருஷ்டியாதிகளைச் செய்வதும், தத்தம் கர்மங்கட்கு ஈடாகத் தனுகரணங்களை ஆன்மாக்களுக்குக் கொடுப்பதுமாகிய சக்தி. இவற்றின் வரலாற்று விரிகளை நூல்கள் வாயிலாயும், அறிஞர் வாயிலாயும் உணர்க.

இனி, கடவுளுக்கு ஆன்மாவோடும் உலகத்தோடுமுள்ள சம்பந்தம் யாதெனின் பேதமும், அபேதமும், பேதாபேதமும் என மூவகைத்து.

பொருள் தன்மையால் கடவுள் உலகத்தினின்றும் வேறாயுளர். அதாவது கடவுள் வேறுபொருள், உலகம் வேறுபொருள். ஆனால் அவர் எங்கும் எள்ளினுள் எண்ணெய்போல் இடைவிடாது கலந்துள்ள கலப்புத் தன்மையால் உலகத்தோடு ஒன்றாயுளர். இவ்விரண்டு தன்மைகளும் அவரிடத்து உண்மையினால் மூன்றாவது தன்மையாகிய பேதாபேத சம்பந்தமும் தானே பெறப்படும். இங்ஙனமே கடவுளும் ஆன்மாவும் பொருட்டன்மையால் வெவ்வேறாய் பேத சம்பந்தமுடையனவே எனினும் கலப்பினால் ஒன்றாய் அபேதசம்பந்தமுடையனவாம். இவ்விரு சம்பந்தங்களும் உள எனவே பேதாபேத சம்பந்தம் என்னும் மூன்றாவது தன்மையும்

தானே பெறப்படும். நமது உடலும் உயிரும் பொருட்டன்மையால் வெவ்வேருகும்; கலப்புத் தன்மையால் ஒன்றேயாகும். இவ்விரு தன்மையும் உண்மையின் 'வேறும் ஒன்றும்' என்னும் மூன்ருவது தன்மையும் தானே பெறப்படும். ஆன்மபோதமும் கண்ணொளியும் பொருட்டன்மையால் வெவ்வேருகும். ஆனல் ஒரு பொருளைக் காணுங்கால் இதுவேறு அதுவேறு என்னும்படி பிரிந்து நில்லாது அவ்விரண்டும் கலந்துநின்று காண்கின்றமையால் (அதாவது கலப்புத் தன்மையால்) ஒன்றேயாகின்றன இங்ஙனம் வேருந் தன்மையும் ஒன்ருந் தன்மையும் உளவாகவே, 'வேறும் ஒன்றும்' என்னும் மூன்ருவதோர் தன்மையும் பெறப்படுகின்றது. இங்ஙனமே கடவுளும் பொருட்டன்மையால் நமது ஆன்மாக்களின் வேருயும், கலப்புத் தன்மையால் அவற்ருேடொன்ருயு முளர். ஒன்ருயும் வேருயுமிருத்தலின் 'ஒன்ருய் வேரு'யுமுளர் என்பது போதரும்.

கடவுள் உயிர்களோடு ஒன்ருயும், வேருயும், ஒன்ருய் வேருயும் இருக்கும் சம்பந்தத்தையே வடமொழியில் 'பேதமாய்', 'அபேதமாய்', 'பேதாபேதமாய்' என்பர். தமிழில் 'ஒன்ருய்', வேருய்', 'உடனுய்' என்பர். 'பேதா பேதமாய்' என்பது 'உடனுய்' என்னும் சொல்லால் குறிக்கப்படுதலை யறிக.

இங்ஙனம் கடவுள் பொருட்டன்மையால் ஆன்மாக்களின் வேறுபட்டவராயிருப்பினும் கலப்புத் தன்மையால் ஆன்மாவுக்கான்மாவாய், அறிவுக்கறிவாய் அவற்ருேடு கலந்துநின்று உதவுவர் என்பது ஈண்டறியத்தக்கது. இது பிரபஞ்சத்துக்கும் ஒக்கும் இங்ஙனம் கடவுள் ஆன்மாவோடும் பிரபஞ்சத்தோடும் மூன்று தன்மைகளோடு கூடி நிற்றல்பற்றியே சிவபெருமான் சைவத்தில் அத்துவித வஸ்து எனப்படுகிருர்.

"அத்துவித வத்துவைச் சொற்பிரகாசத் தனியை
அருமறைகள் முரசறையவே."

(தாயுமா. திருவருள் விலாசப் பரசிவ வணக்கம் 3).

என்னும் தாயுமானவர் வாக்கு இங்கு உற்று உணரத்தக்கது. சைவசித்தாந்தத்தில் அத்துவிதம் என்பது இரண்டற்ற ஒன்று என்பதன்று. அப்பொருள் கேவலாத்வைதமாகிய வேதாந்தத்தில் பெறப்படும். புனிதாத்துவிதம் அல்லது சுத்தாத்துவிதம் ஆகிய

சைவத்தில் அத்துவிதம் என்பதற்கு இரண்டற்ற மூன்று என்று பொருள். அன்றியும் ஆண்டு இரண்டற்ற ஒன்று என்பதற்கு இரண்டற்ற ஒருபொருள் என்பது கருத்து. ஈண்டு இரண்டற்ற மூன்று என்பதற்கு இரண்டற்ற மூன்று தன்மைகள் என்பது கருத்து. அத்தன்மைகளாவன, கடவுள் ஆன்மாவோடும் உலகோடும் கூடிநிற்கும் மூவகைச் சம்பந்தங்கள். இம்மூவகைச் சம்பந்தங்களையுமுடைய பொருளாகிய கடவுள் அத்துவித வஸ்து எனப்படுவர். இம்மூவகைச் சம்பந்தங்களையுடைய வஸ்துவைப் பற்றிப் பேசுதலாலேயே சைவ சித்தாந்தமும் அத்துவிதம் அல்லது அத்துவித சைவம் எனப்படும்.

இனி ஆன்றோர்கள் தமது கல்விப் பயிற்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், அநுபவ உணர்ச்சிக்கும், காட்சிக்கும் ஏற்பத் தத்தம் கருத்திற் றோன்றியவாறு கடவுளது சொரூபலக்ஷணத்தைப்பற்றிப் பலவகைப்படப் பாரித்துப் பேசியிருப்பினும் அவரது தன்மைகளெல்லாம் இவ் விலக்கணங்களுள் அடங்கிவிட்டதாக நினைத்தல் கூடாது.

"உயர்வற வுயர் நலமுடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே."

(நாலாயிர. திருவாய். 1. 1 : 1).

என்ற ஆழ்வாரே

"ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்
காணலு மாகான் உளனல்லன் இலனல்லன்
பேணுங்காற் பேணு முருவாகும் அல்லனுமாம்
கோணை பெரிதுடைத் தெம் பெம்மானைக்கூறுதலே."

(நாலாயிர. திருவாய். 2 : 5. 10).

என்றும்,

"யாவையும் யாவருந்தானாய் அவரவர் சமயந்தோறும்
தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான் உணர்வின் [மூர்த்தி
ஆவிசே ருயிரினுள்ளால் ஆதுமோர் பற்றில்லாத
பாவனை யதனைக் கூடில் அவனையும் கூடலாமே."

(நாலாயிர. திருவாய். 3 : 4. 10).

என்றும்,

"உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்துரு வியந்தவிந் நிலைமை
உணர்ந்துணர்ந் துணரினு மிறைநிலை யுணர்வரி துயிர்காள்!
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் தரியய னரனென்னு மிவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின் மனப்பட்ட
[தொன்றே."

(நாலாயிர. திருவாய். 1 : 3. 6).

என்றும் கூறிவிட்டனர்.

அவ்வாறே நம் திருநாவுக்கரசு சுவாமிகளும்,

*"மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சிமயானத்தான்
வார்சடையான் மாசொன்றில்லான்
ஒப்புடையனல்லன் ஒருவனல்லன் ஓரூரனல்லன்
ஒருவமை யில்லி
அப்படியன் அவ்வுருவன் அவ்வண்ணத்தான்
அவனருளே கண்ணாகக்காண்பதல்லால்
இப்படியன் இவ்வுருவன் இவ்வண்ணத்தான்
யிவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே."

(தேவாரம் பக். 1235 சுவாமிநாத பண்டிதர் பதிப்பு).

என்று கூறி நமக்கு எச்சரிக்கை செய்திருக்கின்றனர் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

இனி இவ்வாறு கூறப்பட்டனவும், கூறப்படாதனவும் நமது சிற்றறிவுக் கெட்டியனவும் எட்டாதனவுமாகிய பல இலக்கணங்களையுடைய நமது கடவுளுக்குத் தடஸ்த லக்ஷணம் என ஓர் இலக்ஷணமும் உண்டு. முற்கூறியது சொரூப இலக்ஷணம். அதாவது கடவுளுக்கு இயல்பாகவுள்ள சிறப்பிலக்கணம்.

தடஸ்த லக்ஷணமாவது இயற்கையானன்றிப் பிறிதொன்றன் சார்பு முதலியனபற்றிப் பொருட்கு உளதாம் இலக்கணம்.

எனக்கு ஓர் சிநேகிதர் உண்டு. அவர் மனிதர் என்பதும், கை, கால் முதலிய உறுப்புக்களையுடையவ ரென்பதும், இவை போல்வன பிறவும் அவரது இயல்பான சிறப்பிலக்கணங்களாதலின் இவை அவரது சொரூபலக்ஷணம் எனப்படும். அவர் தாம் கற்

*இச் செய்யுள் வேறு பதிப்புக்களில் சிறிது பாடபேதங்களுடன் காணப்படுகின்றது.
ஆசிரியன்.

திருந்த பலவகைக் கல்விகளின் சம்பந்தத்தால் அவர் செய்து வந்த உத்தியோகங்கள் பல. கலாசாலையில் தேகப்பயிற்சி வகுப்பு (Drill Class) நடத்துவார். அப்பொழுது அவரை மாணவர்கள் ட்ரில் மாஸ்டர் என்பர். ஓவிய வகுப்பு (Drawing Class) நடத்துவார். அவ்வகுப்பிலுள்ள மாணவர்கள் அவரை ட்ராயிங் மாஸ்டர் என்பர். சில வகுப்புக்களுக்குத் தமிழ்ச் செய்யுட் பாடம் நடத்துவார். தமிழ் வகுப்புக்கு வருங்கால் அவரைக் கண்ட மாணவர்கள் தமிழ்ப் பண்டிதர் வருகிறார் என்பர். இவையன்றி வீட்டில் நாட்டு வைத்தியமும் செய்வர். ஆண்டு அவரைப் பலரும் வைத்தியர் என்பர்.

இங்ஙனம் இயல்பானன்றிப் பிற பொருள்களின் அல்லது தொழில்களின் சார்பால் ஏற்படும் பெயர்களெல்லாம் அவரது தடஸ்த லக்ஷணத்தின்பாற்படும். இவ்வாறே கடவுளும் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், *திரோபவம், அநுக்ரகம் என்னும் ஐந்தொழிலைச் செய்யுங்கால், அத்தொழில்களின் சார்பால் ஐந்து பெயர்களைப் பெறுகின்றார். சிருஷ்டியைச் செய்யுங்கால் சிருஷ்டி கர்த்தா எனவும், ஸ்திதியைச் செய்யுங்கால் ஸ்திதி கர்த்தா எனவும், சங்காரத்தைச் செய்யுங்கால் சங்கார கர்த்தா எனவும், திரோபவத்தைச் செய்யுங்கால் திரோபவ கர்த்தா எனவும், அநுக்கிரகத்தைச் செய்யுங்கால் அநுக்கிரக கர்த்தா எனவும் பெயர் பெறுவர். இச்சிருஷ்டிகர்த்தா முதலிய ஐவகைப்பெயர்களோடும் ஐவகைத் தொழில்களையும் செய்தல் கடவுளது தடஸ்தலக்ஷணமாகும். கடவுள் சிருஷ்டி முதலிய பஞ்சகிருத்தியங்களையும் செய்தல் என் என்பது மேலே செல்லச்செல்ல விளங்கும்.

சைவத்தில் நித்தியப் பொருள்கள் மூன்று. அவை கடவுள், ஆத்மா, மாயை என்பன. இவை சித்தாந்த சாஸ்திரத்தில் பதி, பசு, பாசம் எனப்படும். பதியாகிய கடவுளது தன்மை முன்னே கூறப்பட்டது. இனிப் பசுவின் தன்மையை அறிதல் வேண்டும்.

(தொடரும்)

---

*திரோபவமாவது ஆன்மாக்கள் தம் கர்மம் முடியும்வரை உலகாநுபவங்களில் உழன்று மயங்கும்படி உண்மையை மறைத்தலாகிய அருட்செயல் ஆகும்.

279

உ

திருச்சிற்றம்பலம்

நற்றிணைச் சிற்றாராய்ச்சி

வித்துவான்

திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்.

ஐந்திணை.

252-ம் பக்கத் தொடர்ச்சி.

"ஐந்திணை" என்பது ஐந்து ஒழுக்கங்களைக் குறிப்பது. அவை முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பன. இவ்வைந்திணையின் முறை வைப்பும், அதன் காரணமும், பெயர்த் தோற்றமும் பற்றி ஆசிரியர் பலரும் வெவ்வேறு கருத்துடையர். ஆசிரியர் இளம்பூரணர் பொருளதிகாரத்து முதற் சூத்திர உரையில் முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்னும் முறையைக் கொண்டார். அவரே உரைத் தொடக்கத்தில் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்ற முறைபற்றி யுரைத்துள்ளார். "முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய முறையாற் சொல்லி"யவற்றிற் கிடையில் பாலையைக் கூறலே ஆசிரியர் தொல்காப்பியர் கருத்தென்பது, அப் பாலையை எழுதிணை "நடுவணைந்திணை"க்கு "நடுவு நிலைத்திணை"யாக் கொண்டமையால் விளங்கும் என்பர், ஆராய்ச்சியாளர். "காடு, நாடு, மலை, கடலென்பதே பெருவழக்கு." (தொல். பொ. 5 இளம்பூரணம்) முதற் சூத்திரவிருத்தியுள் இது முதற்பொருள் முறைபற்றியதெனக் கொள்ளப்பட்டுள்ளது. உரிப்பொருள் கூறும் சூத்திரத்திற் குறிஞ்சித் திணையை முதற்கண் கூறியதுபற்றி ஆசிரியர் நச்சினார்க்கினியர் "நடுவணது" "நடுவு நிலைத்திணை" என்றதற்கு வேறு கருத்துக் கூற முயன்று அழ்குறப் புனைந்தார். (சூத். 2, 5, 9, 14 உரை). இலக்கண விளக்கம் இயற்றிய ஆசிரியர் "குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்த லைந்திணைக் கெய்திய பெயரே" (சூத். 379) எனவும், "வரையே சுரமே புறவே பழனந் திரையே" எனவும், "குறிஞ்சி முதலா அகனைந்திணைக்கு உறுந் திறம் முறையான்" உரைத்தார். இவர் "முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து நல்லியல் பிழந்து நடுங்கு துயருறுத்துப்

பாலை என்பதோர் படிவங்கொள்ளும்" (சிலப். 11. 64, 66) என்பதைக் கருதியே குறிஞ்சிக்கும் முல்லைக்கும் இடையே பாலையை வைத்து அதற்குச் சுரமென்னும் ஓரிடமுங் கூறினர். எங்கள் சிவஞான மாமுனிவர் தொல்காப்பியத்து முதற்சூத்திர விருத்தியுள்ளே எண்ணும் முறை, முதற்பொருண் முறை, புறப்பொருண் முறை என மூவகையிலும் ஒரு பெற்றிப்படப் பாலைத் திணை நடுவண தாகாத காரணத்தான் பிறர் கருத்துக்களை மறுத்து "நடுவணைந்திணை நடுவண தொழியப் படுதிரை வையம் பாத்திய பண்பே" என நிலம் பகுத்தோதுங்கால் நடுவணதெனக் குறிப்பிட்டாராகலின், அங்ஙனம் பகுக்கப்படும் நிலங்களும் ஆகாது அவற்றின் வேறுமாகாது தனக்குரிய நிலம் நடுநிகர்த்ததாய் நிற்றல் பற்றி 'நடுவு நிலைத்திணை' எனக் குறியிட்டாளுதலே ஆசிரியர் கருத்து எனத் தெளித்து முன்னர்க் காட்டிய சிலம்பைப் பூட்டியருளினர். (தணிகைப் புராணம் நாட்டுப். 51, 56)

திணை ஒழுக்கம். நிலத்தைத் திணை என்பாரது கருத்தைக் களவியலுரையாசிரியர் மறுத்தார். விளக்காகிய சுடரிருந்த இடனும் விளக்கெனப்பட்டதுபோலக் குறிஞ்சி முதலிய ஒழுக்கம் நிகழ்ந்த இடனும் அவ்வப்பெயர் பெற்றன என்பர் அவர். ஆசிரியர் நச்சினார்க்கினியருக்கும் இதுவே கருத்து. (தொல். பொ. 5 உரை). காடுறை யுலகிற்கு முல்லையும், மைவரை யுலகிற்குக் குறிஞ்சியும், தீம்புன லுலகிற்கு மருதமும், பெருமண லுலகிற்கு நெய்தலுஞ் சிறந்த காரணத்தானே அவற்றின் பெயர் முன்னர் நிலத்தையும், பின்னர் அவ்வந் நிலத்தில் நிகழும் ஒழுக்கத்தையும், குறித்தவாற்றை அறிஞர் உணர்வர்.

முதல்—கரு—உரிப்பொருள்கள்.

அன்பினால் அகத்தே நன்குற நிகழும் ஐவகை யொழுக்கத்தையே "அன்பினைந்திணை" என்றனர். தீங்குற நிகழுமேல் அவை எழுதிணையுள்ளே தலைகடைப்பாலனவாம் என்று முன்னுங் குறித்தாம். நெஞ்சுகொளி னல்லது காட்டலாகாத அகத்தொழுக்கத்திற்கு நிலமும் பொழுதும் இடமாம். இவ்விடங்களுள் ஒன்றாய பொழுதுங் கட்புலனாகாததே. அது கதிரவன் முதலிய அளவைகளாற் கூறுபட்டதாகக் காணப்பட்டு, இவ்வொழுக்கத்திற்கும் அளவுபற்றிய இடமாதலுணர்க. ஒழுக்கத்தின் நிகழ்ச்சிக்கும், வரையறைக்கும் முறையே நிலனும் பொழுதும் இபற்கையிடமாதலானும், கருப்பொருளின் தோற்றத்துக் கிடமாதலானும் முதற்

பொருளெனப்பட்டன. அம்முதற் பொருளாகிய இடத்தினும் காலத்தினும் தோற்றும் பொருள் கருப்பொருள் எனப்பட்டது. முதற்பொருட்கண் கருக்கொண்டமையாற் கருப்பொருளெனப் பட்டது. கரு என்பது தமிழ்ச் சொல். கருப்பம் என்னும் வட சொற் சிதைவன்று. அதனைத் "துனியும் புலவியும் இல்லாயிற் காமங் கனியுங் கருக்காயுமற்று" எனவும், "புறவுக் கருவன்ன புன்புல வரகு" எனவும் வரூஉமவற்றிற் காண்க. உரிப்பொருள் திணைக்குரிமையான் வந்த பெயரென்பர். "உளங்கூர் கேள்வி யிளம்பூரண ரெனும் ஏதமில் மாதவர்" "மக்கட்குரிய பொருள்" என்றும் அருளினர். "தேருங் காலத்திணைக் குரிப்பொருளே" (சூத். 14). "கருப்பொருள் தோற்றுதற்கும் உரிப்பொருள் நிகழ்தற்குங் காரணமாய் முன்னிற்றலின் முதற்பொருளென்றும், அம்முதற்பொருளாற் றோன்றுதல்பற்றிக் கருப்பொருளென்றும், இவை யிரண்டினுஞ் சிறந்து திணைக்குரித்தாய் நிற்றலின் உரிப் பொருளென்றும் ஆயின என்பது" (இலக்கண விளக்கம் சூத் 380 உரை. கருவிப் பொருளென்பது கருப்பொருளென மருவிற் றெனக் கொள்வாருமுளர்.

முதற் பொருள்.

"ஐந்திணை"யுள் "முல்லை"க்குரிய முதற்பொருளாகிய நிலம் பொழுதிரண்டனுள், நிலம், காடும் காடு சார்ந்த இடமும் ஆம். முல்லை என்னுஞ் சொல் ஒருவகைக் கொடியாகிய முதலையும், அதன் அரும்பு, போது, பூவாகிய மூந்நிலைச் சினையையும், அது சிறக்கப்பெற்ற நிலத்தையும், அந்நிலத்து நிகழும் ஒழுக்கத்தை யும், அவ்வொழுக்கமுடையார் கற்பையும், யாழையும், குழலையும், பண்ணையுங் குறித்து வரும் (தொல். பொ. 5 உரை; முல்லைப் பாட்டுரை; சிறுபாணாறு 30, 169 உரை; சீவகசிந்தாமணி 680, 686, 2542 உரை; சிலப்பதிகாரம் 17; இலக்கண விளக்கம் சூத். 619-ல் உள்ளது வேறு). இம் முல்லை நிலத்தைச் "செவ்வான் செவ்வி"யது (குறுங். 108). "மணிநிலம்" (கலி. 103). "செம் புலப் புறவு," "வம்பு விரித்தன்ன செம்புலப் புறவு" (நற். 321, 221, 141) என்றனர். வம்பு—கச்சு. "சித்திரச் செய்கைப் படாம்." (மணிமேகலை ௩. 160, 168, அகம் 11, குறிஞ்சிப். 198 உரை). இந் நிலம் "உறைதுறந் திருந்த புறவு" (நற். 164) ஆகுங்காற் பாலையெனப்படும். இம் முல்லைநிலம் பற்றிய செய்தி யாக இந் நற்றிணைப்பாலைப் பாட்டிலுள்ள "விளம்பழங் கமழுங்

கமஞ்சூற் குழிசிப், பாசந்தின்ற தேய்கால் மத்த, நெய்தெரி யியக்கம் வெளின்முதன் முழங்கும் வைகுபுலர் விடியல்" (12) என்பது ஈண்டுக் கருதற்பாற்று.

பொழுது "காரும் மாலையும் ஆம்: பிரிந்து மீளுந் தலைவன் திறமெல்லாம் பிரிந்திருந்த கிழத்தி கூறுதலே முல்லைப் பொருளாயும், பிரிந்துபோகின்றான் திறங்கூறுவனவெல்லாம் பாலையாயும் வருதலின், அம் முல்லைப் பொருளாகிய மீட்சிக்குந் தலைவி இருத்தற்கும் உபகாரப்படுவது கார்காலமாம். வினைவயிற் பிரிந்து மீள்வோன், விரைபரித் தேரூர்ந்து பாசறையினின்று மாலைக்காலத்து ஊர்வயின் வரூஉம் காலம் ஆவணியும் புரட்டாசியும் ஆதலின், அவை வெப்பமும் தட்பமும் மிகாது இடை நிகர்த்தவாகிய ஏவல் செய்துவரும் இளையர்க்கு நீரும் நிழலும் பயத்தலானும், ஆர்பதம் மிக்கு நீரும் நிழலும் பெறுதலிற் களிசிறந்து மாவும் புள்ளும் துணையோடின்புற்று விளையாடுவன கண்டு, தலைவற்கும் தலைவிக்கும் காமக் குறிப்பு மிகுதலானும் அக்கார்காலம் அவ்வாறுதல் அறிக. புல்லை மேய்ந்து கொல்லேற்றோடே புனிற்றாக் கன்றை நினைந்து மன்றிற் புகுதரவும், தீங்குழலிசைப்பவும் பந்தர் முல்லைவந்து மணம் கஞற்றவும் வருகின்ற தலைவற்கும், இருக்கின்ற தலைவிக்கும் காமக் குறிப்புச் சிறத்தலின் அக்காலத்து மாலைப்பொழுதும் உரித்தாயிற்று. (தொ. பொ. 6, நற். 393). இங்கு, முல்லையைக் கண்டு தலைவியும் தலைவனுங் கூறியனவாகவுள்ள,

"இளமைபாரார் வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரார் எவண ரோவெனப்
பெயல் புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே." (குறுந். 126).

"கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்
பலர்புகு தரூஉம் புல்லென் மாலை
முல்லைவாழியோ முல்லை நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர் மாட்டே." (குறுந். 162).

என்னும் பாக்களை அறிஞர் நோக்குக.

(தொடரும்)

283

குடை நிழல்.

திரு. K. P. சந்தோஷம் B.A., L.T., அவர்கள்,
ஊறீஸ் உயர்கலைக் கழகத் தலைவர், வேலூர்.

137-ம் பக்கத் தொடர்ச்சி.

கோன், குடை, குடி என்னும் இம்முத்திறம் வழிபாட்டுத் துறையிலும் வழக்குடையதாயிற்று. இன்னும் சைவ, வைணவக் கோயில்களில் விழாக்காலங்களில் குடை, கொடி, தேர் முதலிய சிறப்புக்களுடன் கடவுள் புறப்பாடுகொள்ளுதலைக்காணலாம். இவ் வழக்காறு, எக்காலத்தில், எவ்வாறு இங்ஙனம் வழிபாட்டுத் துறையிலும் புகுந்ததென்று அறுதியிட்டுக் கூறுதற்கில்லை. குடை, கொடி, தேர் முதலியவை அரசர்க் கறிகுறிகளாயிருப்ப, அவை இறைவனை வணங்கும் முறையில் இடம்பெறுவதென்னை? எனின், மன்னர்க்கு மன்னனுயிருக்கின்ற இறைவனைப் பேரரசனாகக் காண்பது பொருந்துமென்று விடை கூறலாம். அரசனுக்கும் கடவுளுக்கும் உள்ள ஒற்றுமை, கோயில் என்ற சொல் தமிழில் வழங்கப்பட்ட அன்றே தோன்றியிருந்தல் வேண்டும். இறைவன் உறையுளாகக் கருதப்படும் இடத்தைக் கோயில் என்ற பெயர் கொண்டு குறித்த அஞ்ஞான்றே, மன்னனுக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பு, இறைவனுக்கும் உயிர்களுக்கும் உண்டென்னும் நினைவு உருப்பெற்றதெனக் கொள்ளலாம். கோ + இல் = கோவில் அல்லது கோயில்; கோயில் எனின் இறை வீடு அல்லது மன்னன் மனை என்பது பொருள். மன்பதையை இம்மை நலந்துய்க்கும் நெறியிற் றவராது நடத்துவது மன்னன் கடமையாகின்றது. இறைவனும், அனைத்துயிர்களையும் இம்மை, மறுமை இரண்டிடத்தும் நலந்துய்க்குமாறு நடத்துகின்றான். சிறப்பாக, எவ்வுயிருந் தன்னெறி விலகாது செல்லும்வண்ணம் இறைவன் நிகழ்த்துஞ் செயலைத் திருக்கூத்து எனக் கூறுவர் சைவர். ஒழுங்கு செய்யப்பட்ட உடலின் அசைவே கூத்தாகும். ஆதலின், ஒழுங்கு செய்தல், முறைப்படுத்தல் என்பதே திருக்கூத்தின் உட்பொருளாகும். ஒழுங்கு செயல், முறைசெயல் வேந்தனது கடமை. ஆகையால், இக் கூத்து அரசு என்ற கருத்தோடு ஒன்றுவதாயிற்று. திருக்கூத்து நிகழுமிடம் தில்லைச் சிதம்பரமாம். கோயில் என்ற பெயர் தில்லைச் சிதம்பரத்துக்கு இடுகுறிச் சிறப்பாக வழங்கப்படுவது ஈண்டுக் கருதற்பாற்று.

கோ, என்ற சொல் மன்னனுக்கும் இறைவனுக்கும் ஒருங்கே வழங்கப்பெறுவதால், ஆண்டா னடிமைத்திறம் என்ற சைவக் கொள்கை எங்ஙனம் பிறந்திருக்குமென்பதை நாம் ஒருவாறு அறியலாம். ஒரு நாட்டிலுறையும் குடிமக்கள் கொற்றவனது குடைநிழலில் தங்கி அமைதிபெறுமாறு, மாநிலத்துள்ள மன்பதை அனைத்தும் கடவுளின் அடிநிழலில் தங்கி இன்பம் பெறும் என்ற கருத்து ஆண்டான் அடிமைத்திறத்தால் நன்கு விளங்கும். ஈண்டுக் கூறியவற்றின் துணைகொண்டு, குடையும், தேரும், கொடியும் கடவுளர் விழாக்களில் இடம்பெறுவதேனென்ப துணரப்படும். மற்றொரு காரணமும் இதற்குக் கூறலாகும். இது முப்புர மெரித்த செய்தியினின்று எழுவது முப்புர மெரித்த வரலாறுவது :—அரக்கர் மூவர், இரும்பு, வெள்ளி, பொன் என்ற மூன்று உலோகங்களாலாகிய பறக்கும் கோட்டைகளை யுடையராய்த் தேவர்க்கும், யாவர்க்கும் இடுக்கண் இழைத்து வந்தனர். இவ்விடர் கண்டு கலங்கிய தேவரும் பிறரும் சிவபெருமானிடத்து அடைக்கலந் தேட அவர், வையகத்தைத் தேர்த் தட்டாகவும், வெங்கதிர்ப் பரிதியையும், தண்ணொளித் திங்களையும் தேர் உருளைகளாகவும், மேரு வரையை வில்லாகவும், வாசுகி எனும் பெரும் பாம்பை நாணாகவும், திருமாலை அம்பாகவும், ஏனைய விண்ணவரைப் பிற உறுப்புக்களாகவும் கொண்டு அரக்கர்கள்மேல் அமர் வேட்டனர். அக்காலை, தேர் உறுப்பினராய விண்ணோர், "இவ் விரிசடைக் கடவுள் நமது துணைகொண்டன்றே அரக்கரையழிக்க முற்பட்டனர்" என்று தம்முள் இருமாப்படைந்தனர். இதனை உய்த்துணர்ந்த முக்கண்மூர்த்தி, குறுநகை செய்து நெற்றிக் கண்ணைத் திறந்து முப்புரங்களையும் எரித்தருளினர்.

இது புராணக் கூற்று. இஃதொரு கருத்தை வெளியிட வமைத்த செய்தியாகும். இங்ஙனம் கூறுங்கால் எனது நினைவையே யான் வெளியிடுகின்றேன் என்று கருதற்க. இதுபற்றித் திருமூலர்,

> "அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
> முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
> முப்புர மாவது மும்மல காரியம்
> அப்புரஞ் செற்றமை யாவர் அறிவரே!"

என்று திருமந்திர முரைக்கின்றார்.

இது, ஈண்டு மற்றொன்று விரித்தலெனப் பெறுமேனும், எடுத்த பொருளின் பயன்கருதிச் சிறிது விரித்துரைக்கற்பாற்று. முக்கண்மூர்த்தி, முப்புர மெரித்தானெனல் மூடர்கள் கூற்றென்று திருமூலர் இகழ்ந்துரைத்து, அது மும்மல காரியம் குறிப்பதோர் அறிகுறி என வியம்புவதால் இது குறித்துச் சில பகர்வதைத் தமிழணங்கின் நேயர்கள் பொறுத்தருளல் வேண்டும்.

மும்மல மென்பன, ஆணவம், மாயை, காமியம் ஆம். இது சைவ சித்தாந்தக் கொள்கை மும்மலத்துள் மிகவும் இறுகிக் கடினமாக விருப்பது ஆணவம். பிறவிரண்டும் இதனினும் எளிமையும் நெகிழ்வும் உடையன. இந்த மும்மலங்களே முப்புரங்களாக நவிலப்பெற்றிருக்கின்றன வென்பது திருமூலர் கருத்து. மிக இறுகியதை இரும்பாகவும், அதனினும் இளகிய தன்மையுடையதை வெள்ளியாகவும், அதனினும் நெகிழ்வுடையதைப் பொன்னாகவும் கூறுதல் ஒக்கும். இத்தன்மை பற்றியே, முப்புரங்கள் இரும்பு, வெள்ளி, பொன் ஆகிய உலோகங்களால் இயற்றப்பட்டவை எனப் புராணம் பகர்ந்தது. மும்மலங்களால் உயிர்கள் அடையும் துன்பத்தைக் காட்டவே, முப்புரங்கள் விண்ணிற் பறந்து விரும்பியவாறு இறங்கி யாவர்க்கும் இடர்விளைத்தன வென்று சொல்லப்பட்டது. மும்மலங்களும் அற்ற பின்னரே, ஆன்மா இறைவனடி சேரும் என்பது சைவர் கொள்கையாதலால், அம் மும்மல அறுப்பே முப்புர எரிப்பாகத் தெரிக்கப்பெற்றது. முப்புர மெரித்த கதைகேட்டு, மும்மலம் அறுவதை எண்ணார் மேற் சிறிது வெகுண்டே திருமூலர், மூடரென்றொரு சுடுசொல்லை இங்கே வழங்கினார். சுட்டிக்காட்டிய வழி காணாரைச் சுட்டுக் காட்டுதல் தகுமன்றே? தேர்மே லேறிச் சிவன் வீதிவலம் வருவது உயிர்கள்மேல் கொண்ட பெருங்கருணையால், இரும்பு, வெள்ளி, பொன்போன்ற ஆணவம், மாயை, காமியம் ஆகிய மும்மலங்களை எரிக்கும் அரிய நிகழ்ச்சியைக் குறிப்பதொன்றாயின், அதிற் குடை என்னும் அடையாளம் தோன்றுவது மிகமிகப் பொருத்தமே ஆதலின், கடவுளர் திருவிழாக்களும் குடை நிழலின் பாற்பட்டனவே.

(தொடரும்)

காலைச் செங்கதிர்.

திருவத்திபுரம் திரு. M. A. தேவராஜன் அவர்கள்.

237-ம் பக்கத் தொடர்ச்சி.

பஃறொடை வெண்பா.

தங்கம் உருகித் தகடா விரித்தாற்போல்
எங்கும் இலங்க இனிதுகண் டிங்கிவற்றைக்
கொள்ளின்பின் யானே குபேரனா வாழ்வலென
மெள்ளமனக் கோட்டை விரிவானில் கட்டினேன்.
கோட்டை மதில்வீழக் கொண்டல்எலாம் எனக்குச்
சாட்டை கொடுப்பதுபோல் தங்கநிற மாறிப்பின்
வெள்ளித் தகடாய் விளங்க, அவைநோக்கி
உள்ளம் உடைந்தேன்; "ஒளிவிட்ட பொன்னே, நீ
அப்போதே கொள்ளாது அவமே யிருந்தாயே!
இப்போதென் செய்வாய்? இங்கேங்கும் மடநெஞ்சே!
இன்னும் இதுபோல் இருப்பின்இவ் வெள்ளியெலாம்
மின்னும் திறமொழிந்து மீளும் இரும்பாக,"
என்றதும் என்னெஞ்சம், "இப்போது தான்என்ன,
ஒன்றும் முழுகவிலை; ஓங்குமிவ் வெள்ளியெலாம்
கொள்ளின் எனைப்போல் குவலயத்தில் யாருள்ளார்?
அள்ளிமகிழ்வேன்" என்றது; "அந்தோ!" அவையெல்லாம்
அக்கணமே மாறி அழகில் இரும்பாயென்
மிக்க மனக்கோட்டை மேலிடியும் வீழ்ந்ததென
எண்ணிக் கலங்கினேன்; என்னெஞ்சம் தேற்றியெனை
"மண்ணும் பலவெண்ணம் மட்டின்றிக் கூட்டியதில்
ஆசையெனும் நீரை அளவின்றிக் கொட்டிக்கீழ்
வேசையரைப் போல விழுந்தபொரு ளால்கோட்டைக்
காசு பறித்தற்குக் கட்ட முனைந்தெனக்குத்
தேசு குறையிரும்பும் சேர்க்கும் பெருஞ்செல்வம்
வாட்டம் உறுதேநீ" என்று வழுத்திடவும்,
"ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதார்?" என்றபடி
செம்பொன்னும் வெண்பொன்னும் தேடாமற் போனாலும்,
பைம்பொன் பெறுவேன் படர்ந்திவ்வான் தோற்றுகிற
எல்லாக் கரும்பொன்னும் என்றும் எனக்காகின்
வல்லார் எனைவெல்ல வானுலகத் தேயுமிலை,"
என்றுபல எண்ணி இரும்பைப் பிடிப்பதற்குக்
கன்றுபோல் துள்ளிக் களிப்போடு தாவினதும்,
குப்புறமாய் வீழ்ந்தென்வாய் கொண்டதையோ மண்ணே!

(தொடரும்)

மகதன்.

திரு. ப. ம. வேணுகோபால நாயுடு அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், இந்து உயர்தரப் பாடசாலை, ஆம்பூர்.

256-ம் பக்கத் தொடர்ச்சி.

அரசனும் அவ்விரு கடிதங்களையும் தனது கைகளில் வாங்கிப் பார்த்தான். அவற்றில் ஒன்றினுக்கு மூலைகளில் கறுப்புத் தடவியிருந்தது. அதனைப் பார்த்து அரசன் மனந் திடுக்கிட்டவனாய் 'என்னவோ' என ஏங்கினான். உடனே அதனைப் பிரித்தான். அவனுடைய முகம் வேறுபாடடைந்தது. தளகர்த்தனாகிய குணவீரன் இறந்தான் என்று கண்டிருந்தது. பெருமூச்செறிந்தான்; துக்கித்தான்; "ஆ குணவீரா! உன்னுடைய ஆண்மை எங்கே? உனது குணங்கள் எங்கே? சென்றவிடந்தோறும் வெற்றிபெற்று வருவாயே! உன்னுடைய பராக்கிரமச் செயல்களை வெளியே கூறக் கூசி நின்றனையோ? உன்னுடைய நற்குணங்களையெல்லாம் நன்றாக அறிந்தோ பெரியோர் உனக்குக் குணவீரன் என்ற பெயர் கொடுத்தனர்? ஆண் சிங்கம்போன்றவனே! உன்னை இனி என்று நான் காண்பேன்! என்னுடைய சுக துக்கங்களையும், பெருமைகளையும் உன்னுடையனவாகக் கருதினையே! ஐயோ! படுத்த மூன்று நாட்களுக்குள் பரமன் திருவடி சேர்ந்தனையே! அந்தோ! உன் குணத்துக்கோ, வீரத்துக்கோ, படைகளைத் திறமையோடு கையாளும் முறைக்கோ, நட்பினுக்கோ, நல்லெண்ணத்துக்கோ நானிரங்குவேன்! நண்பரிற் சிறந்த நண்பனே! உன்னை நான் எக்காலும் எனது ஏவலாள் எனக் கருதாது எனதுறவினன் என்றும், என்னுயிரினும் இனிய நண்பனென்றும் நினைத்திருந்தேனே! நீ இறக்க நானின்னமும் உயிர்வாழ்ந்திருக்கின்றேனே. பிசிராந்தையாரிடத்தில் உணர்ச்சியொத்திருந்ததாலேயே உயிரிழந்த கோப்பெருஞ் சோழனைப் போல நீ இறந்தும் நான் உயிர் நீங்கினேனில்லையே! என்னினும் கன்னெஞ்சர்கள் யார் உளர்?" என்று பலவாறு துக்கித்துச் சிறிது பொறுத்து மற்றைய கடிதத்தையும் பிரித்தான். உகிர்ச்சுற்றின்மீது உலக்கையும் வீழ்ந்தது எனத் துடித்தான். முப்பது கோடி ரூபாய் செலவிட்டுத் தயார்செய்த அவனது ஓர் பெரிய கப்பல் மேற்கே நெடுந்தூரத்தில் சென்று மத்தியதரைக் கடலில் சாமான்களையேற்றிவரும்போது வழியில் சிஸிலித் தீவுக்கருகில் கரைதட்டி மூழ்கியது என அக்கடிதத்தில் எழுதியிருந்தது. என் செய்வான் பாவம்! அதனது அமைப்பையும், அங்கங்களையும், அது அவ்வப்போது கொண்டுவந்த சாமான்களையும், அதைக் கட்டியபின் தான் பெற்ற பெருமையையும் ஆகிய இவற்றையெல்லாம் நினைத்து

நினைத்து அயர்வான், பெருமூச் செறிவான். பட்ட காலிலேயே படுதல் என்பது உலகவியல்பல்லவோ? பரிதாபம்! பரிதாபம்!!

சற்றுத் தூரத்தில் பட்டுத் திரையின்பின் நின்றவளாகிய பொற்றாமரையாள் அரசனது மனத்தளர்ச்சியையும், முகவேறுபாட்டையும், துக்கத்தையும் நன்றாக வறிந்து, பளிக்கறையில் புகுந்து, அவற்றைக் கமலினியினிடம் கூறினாள். கமலினியும் அரசன் அருகில் ஒருவரும் இல்லை என்றதை யுணர்ந்து அவ்விடம் சென்று, எல்லா நிகழ்ச்சிகளையும் அரசனால் அறிந்து, அவனைப் பல இன்மொழிகளாலும், நல்லுரைகளாலும் தேற்ற, அவனும் சற்றுத் தெளிவடைந்து நின்றான். சிறிது பொறுத்து சூரிய வெப்பமும் தணிய, அவர்கள் எல்லோரும் நீராழி மண்டபத்தை விட்டு நீங்கித் திருமகள் உறையுளைச் சேர்ந்தார்கள். அடுத்த நாள் காலை தனது தலைநகராகிய சாகேத நகருக்குச் செல்வதாக மகதனும் தன் மந்திரியிடம் கூற, அவனும் அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தனன். சூரியனும் மகதனுக்கு நேர்ந்த துன்பங்களைப் பார்க்கப் பொறாதவனாய் மேலைக் கடலில் மூழ்கி அவர்களுக்கு இரவு நல்கினான்.

அத்தியாயம் 2.

"மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை."

அரண்மனை ஜோசியர் ஆநந்தராயர்.

மறுநாட் காலை ஆதவனும் அரசனது நிலைமையை அறிய உதயகிரியின் சிகரத்தினின்றும் நோக்குவான்போல் தோன்றினான். தோட்டத்து வாவிகளுள் செங்கழுநீர் மலர்கள் நன்றாக மலர்ந்தன, விரிந்துநின்ற ஆம்பல் மலர்கள் கூம்பின. ஆனைச்சாத்தங்கள் கீசு கீசென ஒன்றோடொன்று கலந்து பேசின. பறவைகள் தங்கள் தங்கள் படுக்கைகளைவிட்டுத் தமது சிறகுகளை உதறி எழுந்தன. அரசனும் விடியற்காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, அன்று தான் சாகேத நகருக்குத் திரும்புவதாகத் தன் மெய்க்காப்பாளரிடம் கூற, அவர்களும் அரசன் ஆணையை ஏற்றுத் தயாராகி நின்றார்கள். முத்துச் சிவிகைகளும், மூடுபல்லக்குகளும், பெரிய வில்வண்டிகளும், குதிரைகளும் வந்து சேர்ந்தன. மகதனும் கமலினியும் ஓர் அழகான முத்துச் சிவிகையில் ஏற, சியமந்தனும் பொற்றாமரையாளும் ஓர் மூடுபல்லக்கில் ஏறினர். மற்றையோர் எல்லாரும் அவரவரது நிலைமைக்குத் தகுந்தபடி வில் வண்டிகளிலும், குதிரைகள் மீதும், பல்லக்குகளிலும் சென்றனர். அவர்கள் காலையுண்டி யருந்திப் புறப்படச் சுமார் பத்து மணிக்கு

மேலாயிருக்கும். சூரியனது வெப்பமும் கொஞ்சங் கொஞ்சமாக அதிகமாகவே, அவர்களும் வழியில் சற்று இளைப்பாறி, மாலைப் பொழுதில் அரண்மனை வந்தடைந்து அவ்விரவைக் கழித்தனர்.

அடுத்த நாட் காலை மகதன் தனது இனிய மனையாளாகிய கமலினியோடு அரண்மனையில் ஓரிடத்தில் தனித்து உட்கார்ந்து, நடந்த செய்திகளைக் குறித்து ஆலோசித்துக்கொண்டிருந்தான். 'இடியின்மேல் இடி' 'புடையின்மீது புடை' என்பதுபோலத் துன்பத்தின்மீது துன்பம் மேன்மேலும் வருவதற்குக் காரணம் ஒன்றும் அறியாதவனாய் மகதன் மனம் வருந்தி, ஓர்கால் கோள்கள் நிலைமாறுவதனால் அவ்வகை ஆயினவோ என வயிர்த்துத் தனது அரண்மனை ஜோசியர் அவ்விடத்தில் இருப்பின் தெரிந்துகொள்ளலாமேயென நினைத்துத் தன் மனைவியிடம் கூறினன். இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது ஓர் சேவகன் உள்ளே வந்து ஆநந்தராயர் வெளியே காத்திருப்பதாகவும், அவர் அரசனது தரிசனத்தை விரும்பி நிற்பதாகவும் கூறினான். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது என நினைத்து, மகிழ்ச்சிகொண்ட அரசன், அவரை உடனே உள்ளேயழைத்து வரும்படி கட்டளையிட்டனன். ஏவலாளரும் அவ்வகையிலேயே சென்று ஆநந்தராயரை அழைத்துச் செல்ல, அரசனும் பெரியோர்க்குச் செய்யவேண்டிய உபசாரங்கள் எல்லாவற்றையும் அவர்க்குக் குறைவறச் செய்து, தனக்கு அருகாமையில் அவர்க்கு ஓர் ஆசனமிட்டு, அதில் அவரை இருத்தினான். ஆநந்தராயரோ மிகுந்த வைதிகர். உடு நூலில் அவர் பிறர்க்கிடுவது பிச்சை. அந்நூற் பயிற்சியில் அவருக்கு உள்ள ஊற்றம் மற்றெவர்க்கு மில்லையெனவே கூறலாம். தகுந்த நூற்பயிற்சியோடு இம்மியும் பிசகாமல் கோள் நிலையை அறிந்து கணிக்கும் வல்லமையினால் அவரது வாக்கு எக்காலத்தும் பொய்த்ததில்லை எனப் புகழப்பெற்றவர். நூல்நுட்பங்கள் ஒருகாலும் பொய்ப்பனவல்ல வென்பதையும், அங்ஙனம் ஏதேனும் தவறு நேர்ந்தால் அதற்குக் காரணம் கணித்தவருடைய குற்றமேயொழிய வேறல்ல என்பதையும் எவரும் சுலபமாக அறியும்படி எவர்க்கும் எடுத்துக்காட்டாக நின்றவர். அவர் மத்துவ மதத்தைச் சேர்ந்தவராயினும் விசிஷ்டாத்துவிதக் கொள்கைகளில் மிகுந்த பற்றுடையவர். அவர் அரையில் உடுத்த பஞ்சகச்ச வேஷ்டியுடனும், மார்பில் வெண்ணிறமாய் விளங்குகின்ற பூணூலுடனும், நெற்றி, பிடரி, தோள்கள், மார்பு, வயிறு முதலிய இடங்களில் சந்தனத்தினால் அணிந்த சங்கம், சக்கரம் முதலிய திருமாலின் சின்னங்களுடனும், தாமரை மணி, பவித்திரங்கள், ஜபமாலை முதலிய அலங்காரங்களுடனும், அரசன் கொடுத்த மகுடம், சால்வைகளுடனும் எக்காலத்தும் அரசவையில் விளங்குபவர். ஆநந்தராயரும் அரசனது முகத்தைப் பார்த்து, "மன்னர் மன்ன! நன்றலர்ந்த செங்காமரை மலர்போலும் உம்முடைய

திருமுகமண்டலம் வாடுவதற்குக் காரணம் என்ன? நமது கோப்பெருந்தேவியாரின் மனத்தில் கோத்த கலக்கம் ஏதோ அறிந்திலேன். அவர் பெயருக்கேற்ப அவர் மனமும் மெல்லிய காற்றுக்கும் அசைந்துவிட்டது போலும். தங்கள் இருவருக்கும் நேர்ந்திருக்கும் மனக்குறையை நான் அறியலாமோ?" எனக் கூறினர். அதைக்கேட்ட வரசனும், "தங்களை யறியாத தொன்றுமில்லை? தங்களுக்கும் எங்கள் விஷயம் மறைவோ?" எனக் கூறித் தங்களது மனக்குறைக்குக் காரணம் இன்னதென எடுத்துரைத்தனர். அரசனும் தன் முதன்மந்திரியாகிய சுகுணனை அழைத்துவரும்படி ஏவலாட்களை அனுப்ப, அவனும் விரைவில் வந்து சேர்ந்தான். இவர்கள் இருந்த இடத்திற்கு அருகே பின்புறத்தில் ஓர் பட்டுத் திரையின்பின் கமலினி சென்று இருந்தாள்; அரசன், சுகுணன், ஆநந்தராயர் ஆகிய மூவரும் சியமந்தனது ஜாதகத்தைப் பரிசோதிக்கலானார்கள். ஜாதகத்தைப் பரிசோதித்து நின்றவளவில், ஆநந்தராயரது முகக்குறிகள் வேறுபட்டன. கோள்கள் மாறு கொண்ட நிலையில் நின்றன என்பதை அவர் அறிந்தார். கோள் நிலைகளைச் செவ்வனே கணித்துநின்ற ராயரும், அரசனுக்கு நேரும் துன்பங்களை எவ்வாறு தமது வாயால் அரசன் முதலானோர்க்குக் கூறுவதென மயங்கி நின்றார். அரசனும் அதை யுணர்ந்து, "சுவாமி! வருவன வந்தேதீரு மாதலால் தாங்கள் அவற்றை எனக்கு எடுத்துக் கூறுவதில் அச்சங் கொள்ளவேண்டியதில்லை. தாங்கள் இப்போது மனத்தளர்ச்சியினால் கூறாமல்விட்டால், நாளை வருவன நடுவழியில் நிற்குமோ? அன்றியும் தாங்கள் இப்போது அவற்றை எடுத்துக் கூறின், நாங்களும் நடக்கும் விஷயங்களில் எச்சரிக்கையுள்ளவர்களாகவிருந்து கூடியவரையும் அவற்றினின்று தப்பிப் பிழைக்க வழிதேடுவோம். ஆதலின் ஒன்றையுமறைக்காமல் எடுத்துக்கூற வேண்டுகின்றேன்" என்று கூற, அவரும், "அரசே! என்னென்று கூறுவேன்? கோள்கள் எல்லாம் மாறு கொண்ட நிலையில் நிற்கின்றன. இவ்வகை நிலைமைக்குப் பலன் ஜாதகனது தந்தைக்குப் பொருளழிவு, நாடு பிறன் கைப்படல், ஜாதகரும் அவரது பெற்றோர் முதலியோரும் இடம்பெயர்தல், சொல்லொணாத் துன்பங்களை யனுபவித்தல், ஆணொரு தேசம் பெண்ணொரு தேசம் அலைதல் என்றல்லவோ கூறும். இது ஜாதகனது எட்டாவது வயதில் தொடங்குகின்றது. குழந்தைக்கும் எட்டாவது வயது தொடங்கி ஒரு மாதமே யானதால் அதன் குறியை இப்போதே காட்டிவிட்டது. ஜாதகனது இருபத்தோராவது தாண்டு வரைக்கும் துன்பங்கள் மேன்மேலும் தோன்றி, அவனுக்கு அவ்வயது முடிவுபெற்றதும், தோன்றிய துயரனைத்தும் சூரியன்முன் நின்ற பனியேயாகி, மீண்டும் தாய்தந்தையர் முதலாயினோரும் ஒன்றுகூடிப் பலவகைப்பட்ட சிறப்புக்களுடனும், புதுப்பெண் தன் வீட்டையச் சந்தோஷமாகத் தலைநகர் வந்து சேர்வர்.

(தொடரும்)

291

வராங்கன் அல்லது வஞ்சமற்றவன்.

ஒரு தொடர்கதை.

திரு. S. ஐயண்ண நைனர் அவர்கள்,

தச்சாம்பாடி, போளூர்.

242-ம் பக்கத் தொடர்ச்சி.

தனபதி—மகனே! இன்னுங்கேள். பொறாமைக் குணத்தால் கேடடைந்தவர்கள் அநேகர். "கெடுவான் கேடு நினைப்பான்", "நினைக்கத் தனக்கு" என்று நீதி நூல்கள் சாற்றுகின்றன. ஆகையால் நீ கொண்ட எண்ணங்களை விடு. நெடுங்காலம் நற்புகழுடன் வாழலாம்."

சுஷேணன்—"அம்மா! நீ புகல்வ தெல்லாம் 'செவிடன் காதில் சங்கூதினது' போலவேயாகும். இனி, இம்மாதிரிக் கட்டுரையைக் கூறாமல் வராங்கனையொழித்து எனக்கு அரசாளுந் தன்மையை யளிப்பாய். இல்லையேல், நான் மரிப்பது திண்ணம்! திண்ணம்!!

தனபதி—(தன் மனத்திற்குள்) 'கெடுமதி கண்ணுக்குத் தோன்றா' தென்பது போல அவனுக் கென்னதான் நீதிகளையுரைத்தபோதிலும் அவனது தீய எண்ணம் அவனைவிட்டு நீங்கவில்லை. மேலும் 'அரசாட்சி செய்தால்செய்வேன், இல்லையேல் உயிரைத் துறப்பேன்' என்கிறான். நிற்க, நம் மகன் ஆண்டாலும் நமக்கு நலமே. நம் பிள்ளை யுற்றசெல்வம் நமக்கே. ஆகையால் நம் மகனிறந்து நாமிருப்பதைவிட, எப்படியாவது உயிரோடிருக்கச் செய்வதுதான் நலம். "அப்பா குழந்தாய்! உன்னிஷ்டப்படியே வராங்கனை இவ்வுலகிலில்லாம லொழித்து உனக்கு மணிமுடி சூட்டுவேன், அஞ்சவேண்டாம்." என்றாள்.

இராம பாணத்தா லடியுண்ட கூனி, வருத்தமடைந்து எவ்விதத்திலேனும் பதிலுக்குப் பதில் துன்புறுத்த எண்ணங்கொண்டு, ஸ்ரீராமர் பட்டாபிஷேக காலத்தில் கைகேயிடமடுத்துப் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய முயற்சிப்பாய் என்று சொல்ல, அதற்குக் கைகேயி முதலில் அவளுக்கு அநேக நீதிகளை எடுத்து ஓதி, பிறகு அவளுரைத்த சூழ்ச்சிகளால் மயங்கித் தன் மகனுக்கே பட்டங்கட்ட முடிவு செய்ததுபோல இத் தனபதியும் முடிவுசெய்ய எத்தனித்தாள்.

சுஷேணன்—" அம்மா! அதிக சந்தோஷம். வராங்கன் மிகு பராக்ரமன்; திடகாத்ர தேகன்; தன்னுயிர்போல் மன்னுயிரை

யோம்புதல் மிக்கான். அவனை எவ்விதத்தில் இவ்வுலகிலில்லாம லொழிப்பது? இது யாராலும் ஆகாதே!

தனபதி — மகனே! அது உண்மையேயாயினும், நமக்கு முக்கியமாயுள்ள நம் பிரதான மந்திரியிடமடுத்து நமது குறைகளைச் சொல்லி, அவனுக்கு அளவிலாத திரவியங்களை நல்கி, நம் வசப்படுத்திவிட்டால் அவ்வமைச்சன் பேயாடுவதுபோல் நாம் எதைச் சொன்னாலும் அப்படியே கேட்டு அதன்படியே நடப்பான். அப்போது நம்மிஷ்டம்போல் உன் பங்காளியாகிய வராங்கனை இவ்வுலகிலில்லாமல் ஒழித்துத் துஞ்சும்படி செய்துவிடுவான் ஆகையால் நாம் நம் தந்திரசாலியாகிய மந்திரி மனைக் கேகுவோம்" என்று கூறினள்.

பிறகு தாயும் தனயனும் தாங்கள் ஏற்பாடு செய்தபடியே மந்திரி மனையைக் குறுகினார்கள்.

ஆண்டு மந்திரியை அணுகி, "அறிவில் வல்ல அமைச்ச! என் மனதில் நெடுநாளாய் ஓர் எண்ணம் உதித்துளது. அதை எவரிடத்தும் கூற என்மனம் இயலவில்லை. உன்னையல்லது வேறு எவராலும் தீர்க்கமுடியாது.

மந்திரி—"அம்மா! அஃதென்ன விஷயம்? என்னிடம் களங்கமற்றுக் கரவாமல் உரைக்கவேண்டும்."

தனபதி—"நான் என்னவென்று புகல்வேன்? மனமோ நடுங்குகிறது; நா கூசுகிறது; ஆனாலும் சொல்லுகிறேன். என் தமக்கை மகன் வராங்கனை இவ்வுலகிலுள்ள யாவரும் புகழ்ந்து அவனே நல்ல அழகுள்ளவனென்றும், பராக்கிரமனென்றும், அவனுக்கே அரசுரிமை கிடைக்குமென்றும் கூறுகின்றார்கள். என் குமாரனை யாவரும் இகழ்ந்து பரிகசிக்கின்றனர் ஆதலால் நீ வராங்கனை இந்நகரத்தினின்றும் அகற்றி, இவ்வுலகிலில்லாமல் செய்துவிட்டு என் மகன் சுஷேணன் அரசுரிமையை அடையச் செய்வாயேயாகில் உனக்கு அளவிலா நிதியமும், நாடும் தருகின்றோம்.

மந்திரி—"அம்மா! எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பேதை மதி. நீ இப்போது என்னிடம் கூறிய வஞ்சனை ஒப்புமா? இதை அவனறிந்தால் உன் தலையும், என் தலையும் தப்புமா?

தனபதி—"மதியிற் சிறந்த மந்திரி! உண்மைதான்; நீ மிகவும் தந்திரசாலியாதலால் இக்காரியத்தைத் தடையின்றி முடிப்பாயென்று எண்ணியே உன்னிடம் புகன்றேன். கட்டாயம் முடித்தே தீரவேண்டும்."

மந்திரி—(தனக்குள்) "பணமென்றால் பிணமும் வாய் திறக்கும். பணம் பத்தெட்டு வகை செய்யும் என்பது போலப் பண ஆசைகொண்டு வராங்கன் ஆண்டாலும், சுஷேணன் ஆண்டாலும் எனக்கென்ன? ஆனால் வராங்கன் மிகு பராக்கிரமும், தைரியமும் பொருந்தியவன். சுஷேணன் தைரியமிழந்தவன் ஆகையால் வராங்கன் என் சொல்லுக்கு அஞ்சி நடவான். சுஷேணன் என் சொற்படி நடப்பான். பிறகு தந்திரத்தினால் அவனையு மொழித்து. நம் மகனுக்கே இவ்வரசு கிடைக்க முயற்சிக்கலாம். ஆனால் வராங்கனைத் தந்திரத்தினால்தான் ஒழிக்க வேண்டும்" என்று எண்ணி, அவள் சொன்ன வார்த்தைகளுக்கு ஒப்புக்கொண்டான். அதைக் கேட்ட தாயும் மகனும், களி மிக்கோர்களாகித் தம்மாண்மனை யடைந்தனர்.

நிற்க, அமைச்சன் தனக்கு அதிகமான செல்வம் கிடைக்கும் என்னும் அவாவினால் ஒரு தகுந்த யோசனை செய்தான். அதன் படியே இரண்டு குதிரைகளைத் தயாரித்து, அவற்றுள் ஒன்றைத் தன் எண்ணப்படி நடக்கக் கற்பித்துச் சாதுவாக்கி, மற்றொன்றினை அதன்மீ தேறிக் கடிவாளத்தைப் பிடித்தவுடன் நேர் ஓட்டமாக ஓடக் கற்பித்து, அவைகளுக்கு உண்டாகிய சாமான்களையெல்லாம் அழகுபெற அணியச்செய்து, அவை இரண்டையும் வராங்க குமாரனுக்குக் காட்டி, "இளவரசே! இப் புரவிகளைப் பார்; இவைகள் எவ்வளவு அழகாயிருக்கின்றன. இவைகள் ஒன்றுக் கொன்று தோல்வியில்லாமல் ஆகாயத்தில் பறக்கும்; மேலுலகம் காட்டும்; இன்னும் பல நற்காரியங்கள் புரியும். இவைகளின் புகழ்ச்சி யாவராலும் கூறவரிது. இதில் இதோ நானே ஏறிச் சவாரி செய்து காட்டுகிறேன்" என்று கூறி, சாதுவான குதிரையின்மீ தேறி ஓட்டி, வலசாரி இடசாரியாகக் கொண்டுவந்து நிறுத்தினான். அப்போது சங்கு முழங்க, சாமரை வீச, மாமழைக் கண்ணியர் பருங்குசூழ, பஞ்சமகா சப்தம் எஞ்சலின்றி இயம்ப, பண்ணொலி வாழ்த்தொலி எப்பக்கமும் இயம்ப, சேனாதிபதிகளும், உற்றார் உறவினர்களும் அருகில் சூழவந்த வராங்க குமாரன் உளம் பூரித்து, மற்றொரு அஸ்வத்தைக் காட்டி, "இதில் நான் ஏறிச் சவாரி செய்கிறேன்" என்று அப்பரியின்மேல் ஏறினான். உடனே அம் மாயப் புரவியின் கடிவாளத்தைப் பிடித்திழுக்க, அது நேர் ஓட்டமாக ஓட ஆரம்பித்தது. அவ்வாறு ஓட, வராங்கன் தன்னால் கூடுமானவரை இழுக்க இழுக்க, அது ஓட்டமாக ஓடி, நூறு காத வழிக்கு அப்பாலிருக்கும் இமயபயங்கர மென்னும் மலைச்சாரலிலிருந்த முட்கள் நிறைந்த காட்டில் ஓட, அம் முட்களில் அன்னவன்மீதிருந்த ஆபரணங்கள் எல்லாம் மாட்டிக்கொண்டு அறுபடவும், வஸ்திரங்களெல்லாம் மாட்டிக்கொண்டு கிழிந்து காற்றில் இலவம்பஞ்சாய்ப் பறக்கவும், தேகமெல்லாம் முட்களால் கீறப்பட்டு ரத்தம் குபீர் குபீரென வெளிவந்து ஆறாய்பா

ஓடவும், அப்பரி அங்குமிங்கும் நுழைந்தோடி, கடைசியில் ஆங்கோர் பாழுங்கிணற்றில் வராங்கனைத் தள்ளித் தானும் விழுந்திறந்தது.

அப்போது வராங்கன் அதிக துயரடைந்து கிணற்றின்மீது படர்ந்து தொங்கிய கொடிகளைப் பிடித்துக் கரையேறி, அருகிருந்த ஓர் மரத்தடியில் நின்று, எண்ணுதுமெண்ணி மனங்குன்றி நடுக்கமுற்று இருக்குங்கால், அம்மலையில் வாழ்வதோர் உழுவை வராங்கனை நோக்கிச் செல்ல, அக் குமரன் அச்சமுற்று, அருகிருந்த பழுமரத்தின்மீது ஏறிக்கொண்டான். அவ் வேங்கை தன்னுலியன்றவரைத் தாவித்தாவி எட்டாமையால் அசைவற்று, நின்று, கீழிறங்கினல் புசிக்கலாமென்று அம்மரத்தினடியிற் படுத்துக்கொண்டது.

இஃது இங்ஙனமிருக்க, பகலவன் பார்த்திப குமரன் படுமிடரைக் கண்டு, இருப்பதைவிட மறைகிறதே நலமென்று மேலைக் கடலிலாழ்ந்தான். அச்சமயம் வராங்கனைச் சூழ்ந்த துயரைப் போலவே இவ்வுலகத்தை யிருள் சூழ்ந்தது. வராங்கன் இன்றிரவு கண்ணுறங்கிக் கீழ்வீழ்ந்தால் பாய்மா புசிக்கத் தயாராய் இருக்கிறது. ஆகையால் இம்மரத்தின்மீது படர்ந்திருக்கும் புல்லுருவிக் கொடியைப் பிடுங்கித் தன்னைக் கிளையோடு கிளையாகச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, "இன்றிரவெல்லாம் நானெப்படித் தனித்திருப்பேன்? எவ்வினையினுல் இவ்விடருற்றேன்? பஞ்சணையில் காம்பெறிந்த மலர்களின்மீது துயிலும் நான் இம்மரத்தின் மீது உறங்க என்ன காரணமோ? அநேக காவலாளிகளால் பாதுகாக்கப்பெறும் யான், தற்போது இக்கொடிய கானகத்தில் கடும் புலியாலன்றோ காக்கப்பெறுகின்றேன்! நான் இவ்வல்லலினின்றும் எவ்வாறு நீங்குவேன்?" என்று இரவெல்லாம் உறக்கமின்றி உருகிக்கொண்டிருந்தான்.

அரந்தையில் அவஸ்தையுற்றிருந்த அரசகுமரன் எவ்வாறிருக்கின்றான் என்பதைக் காணவருவான்போல் அருக்கனும் குணகடலினின்றும் உதயமாயினன். வேந்தன் புதல்வனை விட்டகன்ற வினைபோல உலகிலுள்ள இருள் முழுவதும் நீங்கியது.

அவ்வமயம், கருத்த மேகம்போன்ற ஓர் பருத்த மதக்களிறொன்று அவ்விடம் வந்து சேர்ந்தது. அது வராங்கனைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணத்தால் தன் துதிக்கையாற் றுவித் தாவி எட்டாமை கண்டு, அவ்விடம் காத்திருந்த அப்புலியினிடத்துத் தன் சினத்தைக் காட்டி, அவ்வுழுவையைக் கொன்றதும் தான் வேறு வழியாகக் காட்டினுள் நுழைந்து போய்விட்டது.

(தொடரும்)

295

கல்வியும் செல்வமும்.

திரு. S. சுசீலா, மாணவி, V Form A.
C. S. M. மகளிர் உயர்கலைக் கழகம், ஜார்ஜ் டவுன், சென்னை.

மக்களுள் கல்விமான்கள் என்றும், செல்வவான்கள் என்றும் இருவகையினர் இருக்கின்றனர். 'ஆறிடுமேடும் மடுவும் போல்' செல்வம் மாறிமாறி வரும். செல்வம் என்னுஞ்சொல், செல்வோம் என்றும் பொருள்படும். பணக்காரன் தன் பொருள் களவாடப் படும் என்னும் அச்சத்தால் தூக்கமின்றி ஏக்கமுறுவான். அதனால் பலவகை நோய்களுக் குள்ளாகிப் பொருளைச் செலவழிக்கின்றான் சிலர் பெரிய வருமானங் கருதி முதலிழக்குஞ் செய்வினையிற் புகுந்து, தம் செல்வத்தை ஒழிக்கின்றனர். பொருளுள்ளவரை உற்றார் உறவினர் எப்பொழுதும் சுற்றிக்கொண்டிருப்பர்.

'எடுக்கக் குறையும் செல்வம், ஈயப் பெருகுங் கல்வி' என்னும் பழமொழிப்படி, செல்வம் பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையும், கல்வியோ மேலும் மேலும் வளரும். சிறந்த கல்விமான்களின் பெயர் என்றென்றும் நிலைநிற்கின்றது. கம்பர், காளிதாஸர், ஷேக்ஸ்பியர் முதலிய உலக கவிகளின் பெயர் யாவராலும் பாராட்டப் பெறுகின்றதன்றோ! செல்வர் தாமுள்ள இடத்தில் தான் சிறப்புடன் இருப்பர். கற்றோர்க்கோ சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. கல்வியாளர்கள் சிறிய வருவாய் உடையவர்கள் ஆனாலும் அதனைப் பயன்படுத்தும் வகையறிந்து கவலையற்று வாழ்வார்கள். அவர்களின் கூரிய அறிவே உலகப் பொது நன்மைக்குப் பயன்படுகிறது. மேனாட்டினர் நிரம்பிய கலைஞராக இருப்பதனால் அன்றோ பற்பல புத்தம்புதிய பொருள்களைக் கண்டுபிடிப்பவர்களாகவும், நம்மையெல்லாம் அடக்கி ஆள்பவர்களாகவும் இருக்கின்றனர்.

செல்வமுள்ளவர்கள் எவ்வளவு செல்வாக்குள்ளவர்களாக இருப்பினும் கல்வி கற்றவர்களின் உதவியின்றி ஒன்றுஞ் செய்ய இயலாது. ஆதலால் கல்வியே கைகண்ட உண்மைப் பொருள். கல்வி இல்லாதவன் நடைப்பிணத்திற் கொப்பாவான். நம் உரிமை வாழ்விற்கும், நாட்டின் விடுதலைக்கும் செல்வத்தைக் காட்டிலும் கல்வியே சிறந்தது என்பதில் தடையில்லை. அக்கல்வி பலவாகும். அவற்றுள் தாய்மொழிக் கல்வியே சாலச் சிறந்ததாம்.

ஆதலின் நாமனைவரும் நம் நாட்டின் தாய்மொழிக் கல்வி தழைத்தோங்குதற்குப் பாடுபடுவோமாக.

296

ஐக்கிய நாணயச் சங்கம்.

[ஓர் அங்கிலக் கட்டுரையின் மொழிபெயர்ப்பு].

திரு. S. கஜேந்திரன், திருப்பத்தூர், வ. ஆ.

ஐக்கிய நாணயச் சங்கங்கள், விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்காக முற்படுகின்றன. பாட்டாளிகள் ஒரு நாட்டின் முதுகெலும்பாக அமைந்திருக்கிறார்கள்; அவர்களின் நன்னிலைதான் ஒரு தேயத்தின் நன்னிலைபாயுளது. இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் ஏழையெனச் சொல்லப்படுமொருவன் சுமார் ஆயிரம், ஆயிரத்தைந்நூறு வெண்பொற் காசுகள் ஓராண்டில் சம்பாதிக்கும்பொழுது, ஒரு மனிதன் ஓராண்டில் பொதுப்படையாக எழுபது ரூபாய்கள் சம்பாதிக்கும் இவ்விந்திய நாட்டில், இவ்விதமான சங்கங்கள், மிக்க பயன்தரும் என்பதில் ஐயமில்லை.

பண்டைக் காலத்தில் நம் நாடு செழித்துச் சிறந்து விளங்கியதற்கு மூலகாரணமாயிருந்த குடிசைக் கைத்தொழில்களிற் பெரும்பான்மையானவை அதிவிரைவாக அழிந்துவிட்டன; எஞ்சி இருக்கும் சிலவும் அழிந்துகொண்டு வருகின்றன. ஐக்கிய நாணயச் சங்கங்கள், இந்தக் கைத்தொழில்கள் முன்னேறவும், புதுமை பெறவும், தொழிற்சாலைகளின் போட்டியிலிருந்து அழியாமலிருக்கவும் பாடுபடுவது நமக்குப் பெரியதொரு நன்மையேயாகும். இந்தக் கைத்தொழில்களினால், ஏழு லட்சம் கிராமங்களில் வசிக்கும் மக்கள் ஜீவனம் செய்கிறார்கள். வியாபாரிகள், தொழிலாளர்கள், குறைந்த சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்கள் முதலியோர் ஐக்கிய நாணயச் சங்கங்களினால் அடையும் நன்மைகள் பல.

சில ஆண்டுகளாகத்தான் ஐக்கிய நாணயச் சங்கங்கள், கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் மூலம் ஆசிரியரும், மாணவரும் பல நன்மைகள் அடைந்து வருகின்றனர்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற முதுமொழியை நன்குணர்ந்து, தொத்து நோய்களைத் தடுப்பதற்கு மிக முக்கியமான சுகவாசத்திலும், சுகாதாரத்திலும் இச் சங்கங்கள் மிக்க கவனஞ்செலுத்தி வருகின்றன. மேலும் ஒரு நாட்டின் சமூக முன்னேற்றத்திற்கும், அரசியல் முன்னேற்றத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் கல்வியே அடிப்படையான காரணம். ஐயந்திரிபற விளங்கும் இக்கொள்கையைச் செவ்வனே யுணர்ந்து, ஐக்கிய நாணயச் சங்கங்கள் கல்வி விடயங்களுக்கு நன்கொடைகள் அளிக்கின்றன.

297

மதிப்புரைகள்.

கீழ்வருவன நன்றியறிதலுடன் வரவேற்கப்பெறுகின்றன.

1. ஸ்ரீ அரவிந்தரும் அவரது யோகமும்.

ஆசிரியர்:—திரு. P. கோதண்டராமன், M.A., B.L.

இந்நூல், நம் நாட்டின் முடியணி மணியென மிளிரும் சீரியரிற் சிறந்தாராய்த் தற்போது புதுவைமா நகரில் வீற்றிருக்கும் புவிபுகழ் பெரியார் அரவிந்தரின் வாழ்க்கை வரலாற்றினையும், அவரால் புதுவையில் மலர்ந்துவரும் பூரண யோகத்தையும் பற்றி எவர்க்கும் விளங்கும் எளிய தமிழ்நடையில் இயம்பும். அவ்வருட் பெருந்தகையாரின் வாழ்க்கை வரலாறு மிக்க வியப்பும் விருப்பும் விளைவிக்கும் சிறப்பினதாகவுளது. அன்னார் பொன்னுரைகளும், யோகமுறைகளும் யாரும் பன்முறை பயின்று பயன்படுத்திக்கொள்ளுதற் குரியன.

ஆசிரியர் திரு. கோதண்டராமன் அவர்கள் அருட்டிரு வடிவினர் அரவிந்த அடிகளின் அரவிந்த அடிகளில் இருத்திய பேரன்பு பிறரும் பாராட்டிப் பின்பற்றுதற்குரியதாம்.

166 பக்கங்கள் கொண்ட நேர்த்திவாய்ந்த இப்புத்தகம், இதனைப் பதித்த P. G. பால் & கம்பெனி, ப்ரான்சிஸ் ஜோஸப் தெரு, சென்னை என்னும் முகவரியிற் கிடைக்கும். விலை 10 அணா.

2. குமரன்.

ஆசிரியர்:—திரு. முருகப்பா அவர்கள்.

காரைக்குடியினின்றும் வியாழன்தோறும் வெளிவரும் ஒரு சிறந்த வார வெளியீடு. நாட்டுப் பற்றினை நிலைநாட்டும் நாட்டம் நிறைந்த இவ்விதழ், பதினெட்டாண்டுகளாகப் பொதுநலப் பெரும்பணி புரிந்துவருகின்றது. இதனை இவ்வாண்டின் துவக்கத்திலிருந்து வரப்பெறுகின்றோம். சிறந்த தமிழ் இலக்கிய, இலக்கண உணர்ச்சிகளையும், வீரம் விளங்கும் அரசியல் அறிவையும், தேச சேவைக்குரிய பிற திறமைகளையும் ஊட்டவல்லதாய், உலகியற் செய்திகளும் நிறைந்து விளங்கும் இவ்வெளியீடு, தமிழர் ஒவ்வொருவர்க்கும் பயன்படும் தகுதிவாய்ந்ததாம்.

ஆண்டு வரி: உள்நாடு ரூ. 5. சிலோன் ரூ. 6. வெளிநாடு ரூ. 7.

3. தமிழ்க்கலை.

ஆசிரியர் :—வித்துவான் திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள்.

காஞ்சியினின்றும் வெளிவரும் இச் செந்தமிழ்த் திங்கள் வெளியீடு, நம் அன்னைத் தமிழணங்கின் பழங் கலைகளைப் புதுப்பித்து, மாசுபோக்கித் தேசுபெறச்செய்யும் முயற்சியுடன் உழைப்பதாம். சிறந்த பேரறிஞர்கள் வரையும் முத்தமிழ் வித்தகம் செறிந்த அரிய கட்டுரைகளுடன் விளங்குகின்றது. அழகிய வேலைப்பாடமைந்த இப் பதிப்பு, யாவர்க்கும் பயன்படுமாறு 12 அணா ஆண்டு வரி யுடையது.

4. சிறுவர் அறிவுக்கதிர்.

ஆசிரியர் :— பண்டிதர் திரு K. G. வேதமுத்து அவர்கள்.

ஈரோட்டினின்றும் வெளிவரும் சிறுவர்க்குரிய ஒரு சிறந்த மாத வெளியீடு. 'தம்பொருள் என்ப தம்மக்கள்' என்பதற்கிணங்க நமக்கு எத்தகைச் செல்வமிருப்பினும் மக்கட் செல்வமின்றேல் மாண்பின்றாம். ஆதலின் நம் மக்களின் முன்னேற்றங்கண்ணிய இக்கண்ணியத் திங்கள் வெளியீடு சிறுவர்க்குச் சிறந்தவிருந்தாகும். இனிய எளிய நடையில் இளைஞர்க்கேற்ற விநோதம், வேடிக்கை, விளையாட்டம், விடுகதை, கதை, நீதி, கைத்தொழில், கட்டுரை, விநோதக் கணக்கு, பெரியோர் வரலாறு முதலியவைகள் இதில் விளங்குவது கண்டு மகிழ்கின்றோம். இதனைப் படிக்கும் பாலர் அறிவு, ஆண்மை, உடல்நலம், ஊக்கம், ஒழுக்கம் முதலியன பெற்று உயர்வுறுவர். சிறுவர் அறிவுக்கதிர் செழித்தோங்குமாறு திருவருளை வேண்டுகின்றாம்.

ஆண்டு வரி: உள்நாடு 12 அணா. வெளிநாடு ரூ. 1—8—0.

5. நவலட்சுமி.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஒரு இலவச மாத வெளியீடு. விகடம், விநோதம், விடுகதை, தொடர்கதை முதலியன நிறைந்து, அறிவு வளர்ச்சிக்கேற்ற கட்டுரைகளும் அமைந்து, சினிமாப் பகுதிகளுடன் சிறந்து விளங்குகின்றது. வேண்டுவோர் :—தி. இ. நே. நியூஸ் மார்ட், கோம்பனித் தெரு, கொழும்பு என்னும் முகவரிக்கெழுதி இலவசமாகப் பெறலாம்.

ஆசிரியன்.